Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC. 184/2023 |
| Deposition of witness for | :: | PW. 12 |
| Name | :: | முத்துராஜ் |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2024

---

எதிரி ஆஜர்

10.12.2024

முதல் விசாரணை:

1. நான் தற்போது இருக்கன்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.01.2023 ம்தேதி 13.00 மணிக்கு நான் பந்தல்குடி காவல் நிலையத்தில் நான் நிலைய பொறுப்பில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அருப்புக்கோட்டை பாளையம்பட்டி பசும்பொன் நகரை சார்ந்த நாகரத்தினம் மனைவி முத்துமாரி நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.9/2023 பிரிவுகள் 279,304(எ) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகாரினை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மற்றும் நகலினை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன். வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக தாலுகா வட்ட காவல் ஆய்வாளர் திரு பார்த்திபன் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. புகார் மனுவை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி புகார் மனுவை காவலர்கள் சொல்ல சொல்ல எழுதபட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் அசா.1 னிடம் புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

சிசி 184/2023
அ. சா. 5
பெயர் : பாலகிருஷ்ணன்
10.12.2024

**எதிரி தரப்பில் பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. இரு சக்கரவாகனத்தில் முகப்பு விளக்கும், வலது பக்க இண்டிகேட்டரும் சேதமடைந்து இருந்ததை பார்த்தேனா என்றால் ஆமாம். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் இருசக்கரவாகனத்தில் முன்பக்கம் சேதம் ஏற்பட்டு இருப்பதால் வேறு ஒரு வாகனத்துடன் நேருக்கு நேராக மோதி மேற்படி சேதம் அடைந்துள்ளது என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.